# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

## பொது மக்கள் சேவைத் துறைகளை தனியார்மயமாக்குவதை எதிர்த்து போராடுவோம் !

**சேவைத் துறை தொழிற்சங்கங்களின்**

**(Trade Union Internatiional off Public Serviices - (TUIPS)**

**12- வது சர்வதேச மாநாட்டின்**

**சரித்திர பிரசித்தி வாய்ந்த அறைகூவல் !**

**வழிகாட்டும் குழு உறுப்பினராக நமது பொது செயலாளர்**
**தோழர் P.அபிமன்யு தேர்வு- பணி சிறக்க வாழ்த்துக்கள்**

அன்பார்ந்த தோழர்களே,

சேவைத் துறை தொழிற்சங்கங்களின் (TUIPS) 12- வது சர்வதேச மாநாடு நேபாள நாட்டின் தலைநகரான காத்மாண்டுவில் வெற்றிகரமாக நடைபெற்றது. TUIPS சேவைத்துறைகளில் உள்ள ஊழியர்களின் சர்வதேச அமைப்பு .BSNL ஊழியர் சங்கம், இந்த சர்வதேச அமைப்பில் நீண்ட காலமாக முக்கிய அங்கமாகத் திகழ்வதோடு, இந்த சர்வதேச அமைப்பின் மூலம், உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனமான WFTU- லும் இணைந்து செயல்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் பொதுமக்களுக்கான சேவைத்துறைகள் மிக அதிக அளவில் தனியார்மயப் படுத்தப் படும் சூழ்நிலையில் இம்மாநாடு நடைபெற்றுள்ளது.
..
அரசுத் துறைகள் மற்றும் அரசு பொதுத் துறைகள் மூலமாகவோ வழங்கப் பட்டு வந்த பொதுமக்களுக்கான சேவைகள் பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில், தனியார்மயமாக்கப் பட்டு வருகின்றன. எனவே, இயல்பாகவே, இம்மாநாட்டின் மையப் பொருள் “பொதுமக்களுக்கான சேவைத்துறைகள் தனியார் மயமாக்கப் படுவதை எதிர்த்துப் போராடுதலும், மக்களுக்கு சேவை வழங்குதலும்” என்பது குறித்து அமைந்தது.

BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகள் குழுவில், அகில இந்திய தலைவர் தோழர். பல்பீர் சிங், அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். P. அபிமன்யு, துணைப் பொதுச்செயலாளர் தோழர். ஸ்வபன் சக்ரவர்த்தி, பொருளாளர் தோழர். சைபால் சென் குப்தா ஆகிய நால்வரும் கலந்து கொண்டனர். 13.2.2015 அன்று வண்ண மயமான நிகழ்ச்சியோடு மாநாடு இனிதே துவங்கியது.

நேபாளம் சின்னஞ்சிறிய நாடாக இருந்த போதும், அங்குள்ள நேபாள அரசு ஊழியர் சங்கமும்(NEGEO) , நேபாள தொழிலாளர் மகா சம்மேளனமும்(CONEP) இணைந்த வரவேற்புக் குழு இந்த மாநாட்டிற்கான மிக சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் (UML) தலைவர் தோழர். கே.பி.ஷர்மா மாநாட்டைத் துவக்கி வைத்தார். துவக்க நாளின் பிற்பகலில் வண்ண மயமான ஒரு பேரணி நேபாளத்தின் சாலைகளுடே நடைபெற்றது. அன்றைய மாலை நேரத்தில், நேபாளத்தின் செழுமையான

கலாச்சாரத்தை எடுத்துக் காட்டும் சிறப்பு வாய்ந்த கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இரண்டாம் நாள் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. TUI PS ன் தலைவர் தோழர். லுலாமைல் சோடாகா தலைமையுரை ஆற்றினார்.

மாநாட்டின் வரைவு தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, பெரும்பான்மையான பிரதிநிதிகள் விவாதத்தில் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். 34 நாடுகளிலிருந்து, 49 சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர். பிரதிநிதிகள் அவரவர் நாடுகளில் நடைபெற்று வரும் தனியார்மய நடவடிக்கைகளை விளக்கியதோடு, அவற்றை எதிர்த்து தங்கள் நாட்டின் உழைப்பாளி வர்க்கம் நடத்தி வரும் சரித்திர பிரசித்தி மிக்க போராட்டங்களைக் குறித்தும் எடுத்துரைத்தனர்.
.

ஐரோப்பா, ஆப்ரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நமது பொதுச் செயலாளர் தோழர். அபிமன்யு, விவாதத்தில் பங்கேற்று, இந்தியாவில் சேவைத் துறைகள் கடந்த 1991- ஆம் ஆண்டிலிருந்து அதி வேகமாக தனியார்மயமாக்கப் படுவது குறித்து சுருக்கமாக விளக்கி, இந்திய தொழிலாளி வர்க்கம் அதை எதிர்த்து எவ்வாறு பிரம்மாண்டமான போராட்டங்களை நடத்தி வருகிறது என்றும் எடுத்துரைத்தார். மேலும், அவர், நரேந்திர மோடி அரசு சேவைத் துறைகளை அசுர வேகத்தில் தனியார் மயமாக்கி வருவது குறித்தும், ரயில்வே துறையில் 100% அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் முடிவை எடுத்துள்ளது குறித்தும் தெளிவாக எடுத்துக் கூறினார்.

மேலும், ஆளும் கட்சிக்கு மிக நெருக்கமான தொழிற்சங்கம் உட்பட ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கம் தனியார்மயத்துக்கு எதிரான போராட்டங்களை எவ்வாறு நடத்துகிறது என்பது குறித்தும் விளக்கினார். மாநாட்டில், நிர்வாகிகள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த தோழர். ஆர்தர் சேகுயைரா, இத்தாலி நாட்டைச் சேர்ந்த தோழர். பியர்பவோலா லியோனார்ட் ஆகியோர் முறையே தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தைச் சேர்ந்த தோழர். ஏ. ஸ்ரீகுமார் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். வழிகாட்டும் குழுவின் உறுப்பினராக நமது சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர். P.அபிமன்யு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

அவருக்கும் அனைத்து நிர்வாகிகளுக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் ! சர்வதேச மாநாட்டின் அறைகூவலை நிறைவேற்ற முழுமூச்சாய்ப் பாடுபடுவோம் !

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்